# பள்ளி மேலாண்மைக் குழுவிற்கான பயிற்சி முகாம்

அனைவருக்கும் கல்வி திட்டம் சார்பில் காரைக்கால் நெடுங்காடு ஜவகர்லால் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழுவிற்கான பயிற்சி முகாமின் துவக்க விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. பள்ளியின் துணை முதல்வர் எஸ்.கனகராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். தலைமையுரையில் அனைவருக்கும் கல்வி திட்டம் இந்திய அரசால் 2000-ம் ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இந்தியா முழுவதுமாக எல்லா மாநிலங்களிலும் செயல்பட்டு கொண்டு வருகிறது. இந்த இயக்கம் 1-8 வகுப்பு பயிலும் மாணவர்களின் கல்வி தரத்தினை மேம்படுத்த தொடங்கப்பட்டதாகும். இந்தியாவில் தொடக்கக் கல்வியினை அனைத்து மாணவர்களும் பெறும் வண்ணம் செய்தல் இதன் நோக்கங்களில் ஒன்று. செயல்வழி கற்றல் (ABL) மற்றும் ALM முறைகள் இதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றளவில் செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் தாமாகவே பயிலும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது இந்த முறையின் சிறப்பாகும். இதன் மூலம், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மாற்றுத்திறனாளி மாணவர்களின் வாழ்கை தரத்தை மேம்படுத்துதல், இடைநிற்பதை தவிர்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது "வாசிப்போம்... கற்போம்... உயர்வோம்" என்று கூறினார்.

நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் க.காளிதாஸ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு பள்ளியின் வளர்ச்சிக்கு மேலாண்மைக் குழுவின் பங்களிப்பினை விளக்கிக் கூறினார். தொடர்ந்து பள்ளியின் ஆசிரியர்கள் திரு.டேனியல் காலிங்கராயர், முனைவர் அரங்க.ஜனார்த்தனன், திருமதி வி.இராஜலட்சுமி, திருமதி சரளா ஆகியோர்கள் கலந்துகொண்டு பள்ளியின் வளர்ச்சிக்குப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை அனைவருக்கும் கல்வி திட்டத்தின் பள்ளியின் பொறுப்பாசிரியர் திருமதி அ.நிர்மலா அவர்கள் செய்திருந்தார்கள். இந்தப் பயிற்ச்சி முகாமில் பள்ளியின் நிர்வாகக் குழவின் உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.